

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (12.7.2024) அவரது இல்லத்தில், சென்னை கிழக்கு மாவட்டம் – அம்பத்தூர் தெற்குப் பகுதி 89வது வட்ட பகுதிப் பிரதிநிதி கணபதியின் மகள் பவித்ரா – அஜித்குமார் ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். உடன் இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், கழக நிர்வாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் ஆகியோர் உள்ளனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (12.7.2024) அவரது இல்லத்தில், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி – அண்மையில் திருமணம் நடைபெற்ற தனது பேரன் டாக்டர் எஸ்.நாச்சியப்பன் ரகுபதி – டாக்டர் பி.அழகம்மை ஆகிய புதுமண இணையருடன் சென்று சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.7.2024) சென்னையில் நடைபெற்ற எம்.எஸ். ஜாபர் சேட், இ.கா.ப., (ஓய்வு) அவர்களின் மகள் ஹஸ்னா – சிரிஷ் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



செஸ் விளையாட்டில் மிக இளம் வயதிலேயே #FIDE 'Women Candidate Master' பட்டத்தை வென்ற அரியலூர் மாவட்டம் உடையார் பாளையத்தைச் சேர்ந்த சர்வாணிகா இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அப்போது உலகளாவிய போட்டிகளில் தடம் பதித்து தமிழ்நாட்டிற்கும் இந்தியாவிற்கும் சர்வாணிகா தொடர்ந்து பெருமை சேர்த்து வெற்றிப் பயணம் தொடர வாழ்த்தினார்.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் நேற்று முன்தினம் (12.7.2024) ஸ்ரீரங்கம் வட்டம், திம்மராய சத்திரத்தில் ரூபாய் 106 கோடி மதிப்பீட்டில் புதிய காவிரி பாலம் கட்டும் பணிக்காக திட்டப்பணிகளை தொடங்கி வைத்தனர். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் வே.சரவணன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.இனிகோ இருதயராஜ், எம்.பழனியாண்டி, கண்காணிப்பு பொறியாளர் (கட்டிடம் மற்றும் பராமரிப்பு) செந்தில், கோட்டப்பொறியாளர் கண்ணன், நகர பொறியாளர் சிவபாதம், மாவட்ட நகர் ஊரமைப்புக் குழு உறுப்பினர் வைரமணி, மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கோவை மாவட்டம் நீலகிரி நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கோவை கூடலூர் நகரம், வீரபாண்டி பேரூராட்சிக்குட்பட்ட சாந்தி மேடு செல்வபுரம், சாமி செட்டிபாளையம், கவுண்டம்பாளையம், நாயக்கனூர், வீரபாண்டி உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட கிராமங்களில் கூடலூர் நகரச் செயலாளரும், நகரமன்ற தலைவருமான அறிவரசு தலைமையில் கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி, வீரபாண்டி நகரச் செயலாளர் சுரேந்திரன் ஆகியோர் முன்னிலையில் தி.மு.க. துணை பொதுச் செயலாளரும், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா வீதி வீதியாகச் சென்று வாக்களித்த பொதுமக்களைச் சந்தித்து நன்றி தெரிவித்தார். இந்த கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.ஆர்.சண்முகசுந்தரம், டி.பி.சுப்பிரமணியம், காரமடை கிழக்கு மற்றும் மேற்கு ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.எம்.டி.கல்யாணசுந்தரம், சுரேந்திரன், காரமடை நகரச் செயலாளர் வெங்கடேஷ், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ரதி மனோகர், கூடலூர் நகர துணைத் தலைவர் ரதி ராஜேந்திரன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அந்தோணி ராஜ் உள்ளிட்ட தி.மு.க. நகர மன்ற உறுப்பினர்கள், முக்கிய நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டில்

# சட்டம் - ஒழுங்கை சீர்குலைக்க சில கட்சிகள் சதி!

## வி.சி.க. தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி. பேட்டி!

சென்னை, ஜுலை 14 -

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கை சீர்குலைக்க சில அரசியல் கட்சிகள், அமைப்புகள் சதி செய்கின்றன என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்த பின்னர் திருமாவளவன் கூறினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் சென்னை தலைமைச் செயலகத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திருமாவளவன் சந்தித்து பேசினார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சந்திப்புக்கு பின் திருமாவளவன் அளித்த பேட்டி வருமாறு:-



தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கை கெடுத்து பிரச்சினைகளை உருவாக்க சில அரசியல் கட்சிகள், அமைப்புகள் சதி செய்கின்றன. பகுஜன் சமாஜ் மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங் படுகொலையிலும் அரசியல் சதி இருப்பதாக வி.சி.க. கட்சி சந்தேகிக்கிறது.

ஆம்ஸ்ட்ராங் பலியான சில நிமிடங்களிலேயே பா.ஜ.வைச் சேர்ந்த ஒருவர் சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என பேட்டி தருகிறார். எடுத்த எடுப்பிலேயே தமிழக அரசின் கட்டுப்பாட்டில் உள்ள போலீஸ் விசாரிக்க கூடாது என கூறியது ஏன்?

ஆருத்ரா கோல்டு மோசடியில் ஈடுபட்டவர்கள் பா.ஜ.க.வில் பொறுப்பில் உள்ளார்கள் என ஒரு வருடத்திற்கு மேல் பேசப்பட்டு வருகிறது.

ஆருத்ரா மோசடியில் தொடர்புடையவர்கள் தான் ஆம்ஸ்ட்ராங் கொலையிலும் சம்பந்தப்பட்டுள்ளதாக தெரிகிறது. ஆம்ஸ்ட்ராங் கொலையை சி.பி.ஐ. விசாரிக்க பா.ஜ.க. கூறுகிறது.

கலைஞர் குறித்து கொச்சையாக விமர்சித்து சட்டம்-ஒழுங்கை சீர்குலைக்க சதி செய்கின்றனர்.

நீட் தேர்வு முறைகேடு உறுதிபடுத்தப்பட்டுள்ள நிலையில் அதை மறைக்க பா.ஜ.க. முயற்சித்து வருகிறது.

நீட் தேர்வு தொடர்பாக சரியான நிலைப்பாட்டை முதன்முதலில் எடுத்தது தமிழ்நாடுதான். இதை இன்று ஒட்டுமொத்த இந்தியாவும் ஏற்றுக் கொண்டுள்ளது. இந்நிலையில் இப்போது முடிவு அறிவிக்கப்பட்ட தேர்வை மட்டுமின்றி, ஒட்டுமொத்தமாக நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும். நீட்டிலிருந்து தமிழ்நாடு உள்பட விரும்பும் மாநிலங்களுக்கு விலக்களிக்க வேண்டும். இதற்கான அரசியல் ரீதியான அழுத்தத்தை கொடுத்தாக வேண்டும்.

நீட் தேர்வு தொடர்பான விசாரணை உச்ச நீதிமன்றத்தில் வருகிற 18ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு அரசின் சார்பில் அனைத்துக் கட்சி கூட்டம் ஒன்றை கூட்டி அதில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கும், உச்சநீதிமன்றத்துக்கும் அளிக்க வேண்டும்.

இவ்வாறு தொல். திருமாவளவன் எம்.பி. பேட்டியளித்தார்.

